**தலைப்பு 327 – காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

தலைப்பு 327 – காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 11 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களித்தன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி செய்தல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை | 2.1.1 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.2.1 |
| | | 3. | பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.2 |
| | | 4. | நிதி ஏற்பாடுகளின் சேமிப்பு | 2.6 (அ),(ஆ),(இ) |
| | | 5. | உள்ளகக் கணக்காய்வு | 2.10 |
| | | 6. | ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல் | 2.6(இ) |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்கான ஒழுங்கமைப்பு வெற்றியளித்துள்ளது என்பதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை சரியாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவற்கை முறைப்படியாகவும் முழுமையாகவும் தாமதமின்றியும் சேகரித்துக்கொள்வதற்கும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பணத்தை கணக்கீடு செய்வதற்கும் அரசாங்கத்திற்கான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்வதற்கு அதிகாரம் வழங்குவதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதனை மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கும் அவை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்து அதற்காக தாமதமின்றியும் சரியாகவும் கொடுப்பனவு செய்வதற்கு ஒழுங்குவிதிகள் வழங்குதல். | | பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதிலுள்ள குறைபாடுகள் | 2.6 |
| 128(1) (இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும். | 1. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை. | 2.3 |
| | | 2. | இணக்கமின்மை | 2.3(ஈ) |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் | 1. | சொத்துக்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.3 |
| | | 2. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்வதிலுள்ள குறைபாடுகள் | 2.3 (ஈ) |

| | | | |
|---|---|---|---|
| | முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வு வெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும், | | |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் வேண்டப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள், அறிக்கைகள் என்பவற்றை உரிய காலத்தில் சமர்ப்பித்தல். | 1. வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளைத் தாமதித்து சமர்ப்பித்தல் | 2.1.2 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.7 |
| 128(1)(ஏ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்குமுறை, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையான கவனத்துடன் தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது. | 1. பிரதான செயற்பாடுகளுக்கு முரணாக செயற்பாடுகளை நிறைவேற்றுதல் | 2.2.3 |
| | | 2. எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை | 2.1.1 |

## 2 போதியளவானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை

2016 ஆம் ஆண்டிற்கான நீர் தோற்றுவாய்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 23 மில்லியன் நிதி ஏற்பாடும் முன்னைய ஆண்டு மற்றும் நடைமுறை ஆண்டிற்காக ''புனரெதய'' நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக சனாதிபதி செயலகத்திலிருந்து கிடைத்த ரூபா 63.3 மில்லியன் நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அவற்றில் ரூபா 24 மில்லியன் செலவு செய்து பகிர்ந்தளிக்கப்பட்ட விதைகள் மற்றும் நாற்றுக்களில் ரூபா 9.3

மில்லியன் பெறுமதியான விதைகளும் 467,057 நாற்றுக்களும் முளைக்காது அல்லது அழிவடைந்து வெற்றியளிக்காதிருந்தது. இந்த அழிவடைந்த நாற்றுக்களுக்காக ரூபா 1.5 மில்லியன் ஏனைய துணைச் செலவுகளும் ஏற்பட்டிருந்தது.

**2.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி வரையும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

**2.2.1 பெறுகைகளைத் திட்டமிடல்**

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 34.68 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 31.88 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் பெறுகை மேற்கொள்ள வேண்டிய பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்தல்**

06 மடிக் கணனிகளை ரூபா 714,000 இற்கு கொள்வனவு செய்த போது மற்றும் ரூபா 352,000 செலவில் கணனி வலையமைப்பைத் தோற்றுவிக்கும் போதும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) வழிகாட்டி தொடர்பாக ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்ளத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பினவரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வாகனப் பயன்பாடு**

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் 28 வாகனங்கள் காணப்பட்டதுடன் ஐந்து வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் 33 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) விளைவற்ற சொத்துக்கள்**

திருத்தம் செய்ய முடியாத நிலையில் காணப்பட்ட திணைக்களத்திற்குச் சொந்தமான 03 வாகனங்களும் ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 02 வானகங்களும் 02 ஆண்டுகள் காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஈ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

திணைக்களத்தால் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்தும் 02 மாவட்ட அலுவலகங்களின் ஒரு பிரிவில் 245 பொருள் வகைகளைச் சார்ந்த 1023 பொருள் விடயங்கள் உறுதிப்படுத்துவதற்கு உள்ளபடியான மீதி பதியப்பட்டிருக்கவில்லை.

**(உ) வெளித்தரப்பிணர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு கார், காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்கு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதனை ஒப்படைப்பதற்கு அல்லது மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல்.**

காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்குச் சொந்தமான 05 வாகனங்கள் மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு வாகனம் அதேபோல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குச் (UNDP) சொந்தமான ஒரு வாகனம் என்பன முறையாக பொறுப்பேற்கப்படாது திணைக்களத்தால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**2.4 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

திணைக்களம் தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக திணைக்களத்தால் சரிசெய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு<br>பந்தி இலக்கம் | தொடர்புபட்ட விடயம் |
|---|---|
| 3.4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தில் பெறுகை செய்யப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவு குறிப்பிடப்பட்டிருக்காமை. |
| 3.5 | திணைக்களத்திற்குச் சொந்தமான பயன்படுத்த முடியாத மூன்று வாகனங்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை. |
| 3.6 | தேசிய காணி பயன்பாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்டப் பின்னணியினை தயாரிப்பதனையும் தேசிய காணி பயன்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதனையும் உள்ளடக்கி திணைக்களத்தின் பிரதான குறிக்கோளகள் நிறைவேற்றப்பட்டிருக்காமை. |

**2.5 பொது மக்களுக்கு சேவைகள் நிறைவேற்றப்படாமை**

திணைக்களத்திற்காக இணையதளம் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அதில் பொது மக்களின் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்கும் ஒரு முறைமை தயாரிக்கப்பட்டிருக்காததன் காரணமாக முறைப்பாடுகளை அனுப்பிவைப்பதற்குரிய சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்தது.

**2.6 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறி நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 187.67 | 187.09 | 0.58 | 0.31 |
| | மூலதனம் | 50.30 | 42.96 | 7.34 | 14.60 |
| | மொத்தம் | 237.97 | 230.05 | 7.92 | 3.33 |
| 2014 | மீண்டுவருபவை | 260.32 | 252.83 | 7.49 | 2.88 |
| | மூலதனம் | 52.65 | 48.65 | 4.00 | 7.60 |
| | மொத்தம் | 312.97 | 301.48 | 11.49 | 3.67 |
| 2015 | மீண்டுவருபவை | 322.97 | 320.67 | 2.30 | 0.71 |
| | மூலதனம் | 65.00 | 55.99 | 9.01 | 13.86 |
| | மொத்தம் | 387.97 | 376.66 | 11.31 | 2.91 |
| 2016 | மீண்டுவருபவை | 349.06 | 345.32 | 3.74 | 1.07 |
| | மூலதனம் | 70.01 | 63.63 | 6.38 | 9.11 |
| | மொத்தம் | 419.07 | 408.95 | 10.12 | 2.42 |
| 2017 | மீண்டுவருபவை | 350.97 | 346.51 | 4.46 | 1.27 |
| | மூலதனம் | 53.55 | 49.04 | 4.51 | 8.43 |
| | மொத்தம் | 404.52 | 395.55 | 8.97 | 2.22 |

மீளாய்வாண்டு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகினறன.

(அ) அதிக நிதி ஏற்பாட்டை வழங்குதல்

09 செலவு விடயங்களுக்காக ரூபா 41.2 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 35.65 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக சேமிக்கப்பட்ட ரூபா 5.5 மில்லியன் நிதி ஏற்பாடானது வழங்கப்பட்ட தேறிய நிதி ி ஏற்பாட்டில் 09 சதவீதத்திலிருந்து 68 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

(ஆ) குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகளின் மூலம் நிதி ஏற்பாட்டை வழங்குதல்

02 மீண்டுவரும் செலவு விடயங்களுக்கு நிதி ஏற்பாடு போதாமையின் காரணமாக ரூபா 07 மில்லியன் குறை நிரப்பு மதிப்பீட்டின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன்

அவற்றில் ரூபா 02 மில்லியன் அல்லது குறை நிரப்பு மதிப்பீட்டில் 28 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) ஏனைய அமைச்சுக்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

சனாதிபதி செயலகம் மற்றும் காணி அமைச்சால் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே ரூபா 51.78 மில்லியன் மற்றும் ரூபா 25 மில்லியன் ஆக ரூபா 76.78 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் ரூபா 43.88 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 32.9 மில்லியன் அல்லது 43 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இந்நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) சனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ''புனருதய'' நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் விதைகளும் நாற்றுக்களும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அப்பயிர்களில் 35 சதவீதமானவை அழிவடைந்திருந்தன.

(ii) ரூபா 25 மில்லியன் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட காணி வங்கி செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 3.6 மில்லியன் செலவு செய்து கணனி மென்பொருள் உருவாக்கப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து எதுவித பயன்பாடும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 032701 இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 22,000,000 | 21,858,176 | 14,500,000 | 17,995,716 | 69,000,000 | 62,810,781 |

## 2.8 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் ஒரு பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் மற்றுமொரு பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டாதிருந்தமை தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | | உரிய நிதிப் பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பெறுகைக் குழுவின் மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொருள் இருப்பு பதிவேட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 454 | புத்தளம் மாவட்ட அலுவலகத்தில் பொருள் இருப்பு பதிவேட்டுப் புத்தகம் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள். |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | ரூபா | |
| (அ) | நிதிப்பிரமாணம் 104 | 1,366,683 | மீளாய்வாண்டின் போது விபத்து ஏற்பட்ட ஏழு வாகனங்கள் சம்பந்தமாக தொடக்க அறிக்கையும் பன்னிரண்டு வாகனங்கள் சம்பந்தமாக முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 1646 | - | மீளாய்வாண்டில் ஓடிய ஐந்து வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த பொழிப்பும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.10 உள்ளகக் கணக்காய்வு**

நிதிப்பிரமாணம் 134(2) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சித்தல்

(ஆ) பிராந்திய மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத்திட்ட நடவடிக்கைகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இடம்பெற்றுள்ளதா என்பதனைப் பரீட்சித்தல்.

(இ) பிராந்திய அலுவலகங்களின் நடவடிக்கைகளைப் பரீட்சித்தல்

(ஈ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களின் நடவடிக்கைகளைப் பரீட்சித்தல்

(உ) முற்பணக் கணக்கு நடவடிக்கைகளைப் பரீட்சித்தல்.

**2.11 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**2.11.1 அங்கீகரித்த பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி ஊதியங்களுக்கான செலவுகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி ஊதியச் செலவுத் தொகுதிக்காக ரூபா 301.96 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 477,033 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 40 | 34 | 06 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 558 | 519 | 39 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 97 | 79 | 18 |
| (v) | அமையம் / தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - |
| | மொத்தம் | 696 | 633 | 64 |

**2.11.2 முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

2002 ஆம் ஆண்டின் போது காணி பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர் காணி அமைச்சிற்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.